**கவனிக்க.**- *2009.11.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1630 - 2009 නොවැම්බර් 27 වැනි සිකුරාදා - 2009.11.27**

*1630 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1722 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1730 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2009, திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, மார்கழி மாதம் 24 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, ஐப்பசி மாதம் 26.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | மலிம்பொட | திலஜ்யாவெல்ல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வலிகம் கோறளை பிரிவின் விவாகப் (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர், அலுவலகம், மாத்தறை |
| மாத்தறை | வெலிபிற்றிய | உடுகாவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வலிகம் கோறளை பிரிவின் விவாகப் (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்ட செயலாளர் அலுவலகம், மாத்தறை |

11-619

## நீதிச்சேவை ஆணைக்குழு

கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் காதி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

கீழே குறிக்கப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் :-

முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர் ஒருவர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றுள்ள ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல ஒழுக்கமுள்ளவராகவும், இருக்கவேண்டியதோடு, முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டத்தினைப் பற்றிய நல்ல அறிவுடையவராகவும், சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்புமுடையவராகவும். விவாகமான ஒருவருமாக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற காலஎல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 6000 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காகவும் மாதாந்தம் ரூபா 5,000 கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்தில் பெற்றுக்கொள்வதோடு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தினை 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ எனக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

எம். பீ. த சில்வா,
பதில் செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம்,
கொழும்பு 12,
2009 ஆம் ஆண்டு நவெம்பர்.

### அட்டவணை

1. ஹம்பாந்தோட்டை : ஹம்பாந்தோட்டை நீதி நியாயாதிக்கத்திற் குட்பட்ட பகுதியில் நிலவும் காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

2. கம்பஹா : கம்பஹா அத்தனகல்ல மீரிகம மற்றும் மஹர பிரதேச நீதி நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட பகுதியில் நிலவும் காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

3. கேகாலை : கேகாலை பிரதேச செயலகப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக் குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

4. நீர்கொழும்பு : நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

11-757

---

## நீதி , சட்ட மறுசீரமைப்பு அமைச்சு

தொழில் நியாய சபைப் பேச்சு மொழிப்பெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) மற்றும் (சிங்களம்/ஆங்கிலம்) பதவிகள்

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் தொழில் நியாயசபைப் பேச்சு மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) மற்றும் (சிங்களம்/ ஆங்கிலம்)பதவிகளுக்காக இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. கல்வித் தகைமைகள்.-** (அ) மொழி மற்றும் எண்கணிதம் அல்லது தூய கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் உட்பட ஆகக் குறைந்தது நான்கு பாடங்களில் திறமை சித்தியுடன் இலங்கை சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது.

(i) சிங்கள மொழி/தமிழ் மொழி
(ii) எண் கணிதம் அல்லது தூயகணிதம்
(iii) மேலும் நான்கு பாடங்களில் ஓர் அமர்வில் ஐந்து பாடங்களுக்குக் குறையாமலும், ஆகக் குறைந்தது மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் இலங்கை பொதுத் தராதரப் பத்திரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் 'பி' தரத்தின் சித்தியுடன் 06 பாடங்களில் தே. பொ. க. தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (சிங்களம்/ தமிழ் மற்றும்

கணிதம் உட்பட ஓர் அமர்வில் 05 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

மற்றும்

(ஆ) (i) விண்ணப்பதாரர் தகைமைகளைப் பெற்றுள்ள பரீட்சை சித்தியடைந்த மொழி மூலத்திற்கு மேலதிகமாக வேறு இரண்டு மொழிகளில் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) சரியாகவும் தெளிவாகவும் பேசக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு மொழியிலிருந்து (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) மற்றுமொரு மொழியில் அல்லது மேற்பட்ட மொழிகளில் பேச்சு மொழிபெயர்ப்புச் செய்யும் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையின்/ மாகாண அரசாங்க சேவையின் பதவிகளை வகிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு இவ்வயதெல்லை ஏற்புடைத்தாகாது.

4. **சம்பள அளவுத்திட்டம்**.- MN-1-2006 - ஏ(iv) (படிநிலை 06) மாதாந்தம் ரூபா 13,845- 5×145 - 11×170-10×240 -10×320 - ரூபா 22,040.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- 15/ 90 ஆம் இலக்க பொதுநிருவாக சுற்றறிக்கையின்படி மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றினதும் வாய்மூல பரீட்சையொன்றினதும் பெறுபேறுகளின்மேல் திறன் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர்.

1. எழுத்துப் பரீட்சை.- பாடத்திட்டம்.-
   - சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்தல்
   - தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்தல்
   - சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்தல்
   - ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழி பெயர்ப்புச் செய்தல்

(02 மணி நேர வினாத்தாள்), மொத்தப் புள்ளிகள் 100

2. வாய்மூலப் பரீட்சை.- மொத்தப் புள்ளிகள் 50
   எழுத்துப் பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையின்படி 1 : 2 விகிதாசாரத்தில் வாய்மூல நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்றனர். வாய்மூல நேர்முகப் பரீட்சையின்போது வாய்மூல பேச்சு மொழி பெயர்க்கும் திறமையை கவனத்திற் கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சை சபை, நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படுகிறது. புள்ளிகளை வழங்கும் முறை நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படுகின்றது.

6. **சேவையின் நியமன நியதிகள்**

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும் ;

(ii) நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படும் தற்போது அரசின் நிரந்தரமான பதவி வகிப்பவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் ஒருவருட பதில் கடமைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவார் ;

(iii) சேவையில் சேர்ந்து மூன்று வருட காலத்துள் முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையிலும் 7 வருட காலத்துள் 2 ஆம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்**.- தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையதாகின்றன.

8. இவ்வறிவித்தலின் கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2009.12.18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ பதிவுத் தபாலில்-

செயலாளர்,
நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு,
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி,
கொழும்பு 12

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

9. விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் ''தொழில் நியாய சபைப் பேச்சு மொழிபெயர்ப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல்.

10. விண்ணப்பப் பத்திரம் பூரணமாக நிரப்பப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பம் அல்லது அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தபாலில் தொலைந்து விட்டன எனச் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. அரசாங்க சேவையிலுள்ள/மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத்/நிறுவனத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.

12. விண்ணப்பதாரர் ஒருவரினது விண்ணப்பத்தில் ஏதேனுமொரு பொய்யான தகவல் காரணமாக அவர் தகுதியற்றவராக்குவதற்கும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தெரிய வருமிடத்து அவரை சேவையிலிருந்து விலக்குவதற்கும் ஆளாவார்.

செயலாளர்,
நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு.

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு**

***தொழில் நியாயசபைப் பேச்சு மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) மற்றும் (சிங்களம்/ஆங்கிலம்) பதவிகளுக்கான விண்ணப்பம்***

இலக்கம் :..............................
(அலுவலக உபயோகத்துக்காக)

1. முழுப் பெயர் :- சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :-சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.
3. சொந்த முகவரி :- சிங்களத்தில்/தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.
4. அலுவலக முகவரி :----.
5. தொலைபேசி இல. :----.
6. தேசிய அடையாள அட்டை இல. :----.
7. பிறந்த திகதி :----.
8. 2009.10.31 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
9. ஆணா/பெண்ணா என்பது :----.
10. தேசிய இனம் :----.
11. கல்விகற்ற மொழிமூலம் :----.
12. விண்ணப்பிப்பது பேச்சு மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) பதவிக்காகவா அல்லது (சிங்களம்/ ஆங்கிலம்) பதவிக்காகவா என்பது ----.
13. கல்வித் தகைமைகள் :----.
க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :-

| பாடசாலை | பாடம் | சித்தி | ஆண்டு |
|---|---|---|---|
| | | | |

14. பிற தகைமைகள் :----.

15. இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையெனவும் உண்மையானவை எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதில் அடங்கியுள்ள தகவல்களில் எவையேனும் பொய்யானவை அல்லது தவறானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் தெரியவருமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

***விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்***

***விண்ணப்பதாரர் அரச சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்***

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................... திணைக்களத்தில்/ அமைச்சில்/ மாகாண சபையில் .................................. ஆக சேவை செய்கின்றார் என்றும் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானது என்றும் அவரது வேலைகள், வருகை திருப்திகரமாக உள்ளன என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இப்பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

-----,
திணைக்களத் தலைவரின்/ அதிகாரம்
பெற்ற அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

11-762

---

**தொழில்சார், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு**

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்

**தொழில் நுட்பவியல் கல்லூரிகளில் பணிப்பாளர், மேலதிக பணிப்பாளர் பதவிகள் மற்றும் இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவை 1 ஆம் வகுப்பின் பதவிகள்**

தொழில்சார் நுட்பப் பயிற்சி, அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை 1 ஆம் வகுப்பு பதவிகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன் "நிபுணத்தா பியச இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை கொழும்பு- 05" உள்ள தொழில்சார் தொழில் பயிற்சி அமைச்சு, செயலாளரிற்கு கிடைக்க கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவை 1 ஆம் வகுப்பின் பதவிகள் மற்றும் பணிப்பாளர், மேலதிக பணிப்பாளர் பதவிகள்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**2. சேவை நிபந்தனைகளும் நியமன நியதிகளும் .-**

(i) இப்பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்ப தாரிகள் விதவைகள், அனாதைகள் இளைப்பாற்று நிதியத்திற்கு உதவுதொகைகள் செலுத்துமாறு வேண்டப்படுவர். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அரச சேவையில் ஏற்கனவே நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் உரித்துடையதுமான பதவிகளை வகிக்காதவர் களாயின், சேவைக்கு ஏற்றவாறு, முதலில் மூன்று வருடத்திற்கு தகுதி காண் நிலையில்/ தேர்வாய்வுக்குரிய நிலையில் நியமிக்கப்படுவர். அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையவருமான அரசாங்க அலுவலர் ஒருவர் தெரிவுசெய்யப்படுமிடத்து முதலில் அவர் ஒரு வருடகால பதிற்கடமை புரியும் அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் பதவியில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள், நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருடத்திற்குள் இரண்டாம் மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். இது பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 7/2007 இற்கு ஒருங்கமைவானது. உரிய காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினால் சம்பள ஏற்றம் பிற்போடுவதற்கேதுவாகலாம். மொழித் தேர்ச்சி பெறவேண்டிய உத்தியோகத்தர்கள், க. பொ. த. (சா.த.) இல் பிரதான பாடமாக (1ஆம் மொழி வரிசையில்) கொண்ட சிங்களம்/ தமிழ் மொழியை இரண்டாவது மொழித் தேர்ச்சிக்காக சித்தி பெறல் வேண்டும். (விருப்புத்தேர்வுக்குரிய பாடம் அல்லது 2 ஆவது மொழி, இத்தேர்வில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) அத்துடன் அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சை அல்லது விசேட திறன் பரீட்சை ஒன்றில் சித்தி பெறல் வேண்டும்.

***3. சம்பளமும் கொடுப்பனவுகளும்.***- பொது நிர்வாகச் சுற்றறிக்கை SL-1-2006 இன் படி இப்பதவிகளுக்குரிய திரட்டிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 22,935- 10 × 645 - 8 × 790-17×1,050 - ரூபா 53,550 ஆகும். 1 ஆம் வகுப்பிற்கு ஆரம்ப மாதாந்த சம்பளம் ரூபா 36,755 என்னும் அளவு அடிப்படையிலானதாகும்.

***4. தேவையான தகைமைகள்.***- 2008.07.18 ஆந் திகதிக்கு முன்பாக ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளை நிரூபிக்கத் திருப்தியான சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் :-

4.1 அதிசிறந்த நற்குணமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

4.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு குறையாத வராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசசேவை/ மாகாண சபை சேவையில் இருப்பவர்களுக்கு இவ்வுச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

4.3 (i) பட்டப்பின் கற்கைப் பட்டம் அல்லது பட்டப்பின் கற்கை டிப்ளோமா அல்லது அதற்கு சமமான தகைமைகள் பெற்றிருத்தல்

அத்துடன்

இலங்கை தொழில்நுட்பக்கல்விச் சேவையின் II ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் ஒரு வருட திருப்திகரமான சேவையை* பூர்த்தி செய்தவராகவும் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) பட்டப்பின் கற்கைப்பட்டம் அல்லது பட்டப்பின் கற்கை டிப்ளோமா அல்லது அதற்கு சமமான தகைமைகள் பெற்றிருத்தல்.

அத்துடன்

தொழில்சார், தொழில்நுட்பப்பயிற்சி அமைச்சு அல்லது அதே அமைச்சின் கீழுள்ள நிறுவனத்தில் பதவியைக் கொண்டுள்ள ஒருவர் 06/2006 இன் SL - 1 சம்பள சுற்றறிக்கையில் அவர் நிரந்தரமான பதவியையும் 18.07.2008 இல் ரூபா 30,965 இற்கு குறையாத சம்பளம் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) இலங்கை தொழில்நுட்பக் கல்விச்சேவை II ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப்* பூர்த்திசெய்தவராகவும் தனது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

* திருப்திகரமான சேவைக் காலம் எனக் கருதப்படுவது யாதெனில் சென்ற 05 வருட காலப்பகுதிக்குள் சகல சம்பள உயர்வுகளையும் உரிய முறையில் பெற்றிருத்தல் மற்றும் எச்சரிக்கப்பட்டாலன்றி வேறு ஒழுக்காறு தண்டனை எதுவும் பெற்றிராத காலமாகும்.

5. கீழ்க்காணும் ஆவணங்களில் ஒன்றையோ அன்றேல் யாவற்றையுமோ தேவைப்படும்போது சமர்ப்பிக்கப்படுவதற்கு ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும் :-

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.- சமயத் தீட்சை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.) ;

(ஆ) பட்டச் சான்றிதழ்கள் அல்லது கல்விச் சான்றிதழ்கள் ;

(இ) குணச்சான்றிதழ்கள் ;

(ஈ) உயர் தொழில் திறன்சார் சான்றிதழ்கள் அத்துடன்/அல்லது தொழில்நுட்பத் தகைமைச் சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிகவுயர்ந்த பரீட்சை தொடர்பிலான சான்றிதழ்கள்.

குறிப்பு : (i) விண்ணப்பப்படிவத்துடன் ஏதேனும் ஆவணத்தையோ அதன் பிரதியையோ இணைத்தலாகாது ;

(ii) ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரியின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரச சேவையிலுள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள/கூட்டுத்தாபன தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எவ்வாறாயினும் உரிய துறை/ கூட்டுத்தாபனத் தலைவருக்கு உரிய தினத்திற்கு முன்பு கிடைக்கப்பெற்ற தாமதத்திற்கு அவரால் தகுந்த காரணங்கள் காட்டப்பட்டு சிபாரிசு செய்யப்படுமிடத்து மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படும்.

7. விண்ணப்பங்கள் அல்லது அது சம்பந்தப்பட்ட வேறு உத்தியோகபூர்வக் கடிதங்கள் தொழில்சார் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சின் செயலாளரின் பதவிப்பெயருக்கு முகவரியிடப்பட

வேண்டுமேயன்றி வேறெந்தவொரு அலுவலரினதும் தனிப்பட்ட பெயருக்கு அனுப்பப்படலாகாது.

8. இந்த வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (II அ) இன் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளும் மற்றும் 1986.08.15 ஆந் திகதிய 415 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானியின் பகுதி I பொது இல் பிரசுரமாகிய இலங்கை தொழில்நுட்ப கல்விச்சேவை தொடர்பிலான பிரமாணக் குறிப்புகளுக்கும் காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றத்திற்கும் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

9. இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் பிரமாண விதிகளுக்கமைய இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை 1 ஆம் வகுப்பிற்கான நியமனமானது, வாய்மொழிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். சேவை மூப்பிற்கும், உயர் தகுதியிற்கும் புள்ளிகள் வழங்கப்படும்.

திலக் ஹபன்கம,
செயலாளர்,
தொழில்சார், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு.

தொழில்சார், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு,
"நிபுணத்தா பியச",
இல. 354/2 எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ (ஏ4) அளவிலான தாள்களில் தயாரிக்கப்படல் வேண்டும்)]

**தொழில் சார், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தினது தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் பணிப்பாளர், மேலதிக பணிப்பாளர் பதவிகள், மற்றும் இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை I ஆம் வகுப்பு பதவிகள்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
2. முழுப் பெயர் :----.
3. அலுவலக முகவரி :----.
4. சொந்த முகவரியும் தொலைபேசி இலக்கமும் :----.
5. (அ) நீர் ஓர் இலங்கைப் பிரசையா? :----.
(ஆ) அப்படியாயின் வம்சாவழியினாலா/பதிவினாலா? :----.
6. பால் : ஆண்/பெண் :----.
7. பிறந்த திகதி :----.
வருடம் :----, மாதம் :----, திகதி :----.
8. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
9. தற்போதைய பதவியும் விபரங்களும் :----.
(அ) பதவியும் நியமனத் திகதியும் :----.
(ஆ) நிரந்தரமானதா? அல்லது தற்காலிகமானதா? :----.
(இ) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா? இல்லையா?
(ஈ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றீரா?
(உ) திணைக்களம் :----.
(ஊ) நிறுவனம்/வேலைசெய்யுமிடம் :----.
(எ) வருடாந்த திரட்டிய சம்பள அளவுத்திட்டம் :----.
(ஏ) தற்போதைய வருடாந்த திரட்டிய சம்பளம் :----.
10. உயர்கல்வித் தகைமைகள் தொடர்பான விபரங்கள் :----.
(பட்டப்படிப்பு/பட்டப்பின் கற்கைப் பட்டம்/பட்டப்பின் கற்கை டிப்ளோமா)

| நிறுவனம்/ பல்கலைக்கழகம் | பட்டப்படிப்பு/ பட்டப்பின் கற்கைப் பட்டம் டிப்ளோமா | வருடம் | பாடங்கள்/ துறைகள் |
|---|---|---|---|
| | | | |

11. உயர்தொழில் திறன்சார் தகைமைகள் பற்றிய விபரங்கள் :----.

| தராதரப் பத்திரம் | வழங்கிய நிறுவனம் | வருடம் | பாடங்கள்/ துறைகள் |
|---|---|---|---|
| | | | |

12. இடைத்தர (இரண்டாம்) கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. த.) க. பொ. த. (உ.த.)

| பரீட்சை க. பொ. த. (.....) | வருடம் | பாடங்கள் | சித்தி பெற்ற தரம் |
|---|---|---|---|
| | | | |

13. உயர்தொழில் திறன்சார் கல்வி பயின்ற நிறுவனங்கள் :

| நிறுவனம் | கற்கைநெறி | இருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |

14. முன்னைய நியமனங்கள் (சரியான காலவரையறை) ஒழுங்கில் திகதியுடன் குறிப்பிடவும் :

| பதவி | நிறுவனம் | இருந்து | வரை |
|---|---|---|---|
| | | | |

15. இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவை அலுவலர் ஒருவராயின், வினைத்திறமைகாண் தடையைப் பூர்த்தி செய்துள்ளாரா? :-----. பூர்த்தி செய்துள்ளாராயின்
(i) பூரணப்படுத்திய வருடம் :..........
(ii) மேற்கூறப்பட்ட சான்றிதழின் வகை :..........

16. உமக்கு எதிராக சட்டநீதிமன்றத்தில் யாதேனும் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா? அப்படியாயின் விபரங்கள் தருக.

17. அரசாங்க திணைக்களமொன்றில் அல்லது சபை/கூட்டுத்தாபன மொன்றில் சேவையாற்றியிருப்பின் அச்சேவையிலிருந்து விலக்கப்பட்டதற்கு/விலகியதற்கான காரணம் :-----.

18. உமக்கு எதிராக ஏதாயினும் ஒழுக்காற்று சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா? (அப்படியாயின் அதன் விபரத்தைச் சுருக்கமாகத் தருக) :----.

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமெனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத்தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் தகுதியற்றவராக்கவும் நியமனத்தின் பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கும் பாத்திரமாவேன் எனவும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் விதப்புரை**

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

11-799

---

## கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு

ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்
(ஹெ. க. ஆ. ப. நிறுவகம்)

### பதவி வெற்றிடங்கள்

இலங்கை பிரஜைகளாக விளங்கும் பொருத்தமான தகுதி பெற்றவர்களிடமிருந்து பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. **பதவி** : கணக்காளர்.-

(1) தகைமைகளும் அனுபவமும்.-

(i) பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் ஓர் இணை உறுப்பினர் அல்லது ஐக்கிய ராஜ்ய பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது ஐக்கிய ராஜ்ய பட்டய சான்றுப் படுத்தப்பட்ட கணக்காளர் சங்கத்தின் உறுப்பினர்.

அத்துடன்

உறுப்புரிமையைப் பெற்ற பின்னர் 02 வருடங்களைக் கொண்ட அனுபவம்

அல்லது

(ii) பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இறுதி பாகம் 1 பரீட்சையுடன் அல்லது ஐக்கிய ராஜ்ய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் அல்லது ஐக்கிய ராஜ்ய பட்டய சான்றுப்படுத்தப்பட்ட கணக்காளர் சங்கத்தின் இடைநிலைப் பரீட்சையுடன் முகாமைத்துவத்தில் பட்டம்.

அத்துடன்

கணக்காளர் ஒருவராக 03 வருடங்களைக் கொண்ட சம்பந்தப்பட்ட அனுபவம்.

(2) வயது.- 22-45

(3) சம்பளக் குறியீடும் சம்பள விகிதமும்.- (MM 1-1) ரூபா 25,640 - 3×665 - 7×735 - 15 × 925 - ரூபா 46,655

(அனுபவத்தைக் கொண்ட தேருநர்கள் மேற்படி சம்பள விகிதத்தின் மீது பொருத்தமான புள்ளியொன்றில் நியமனத்திற்காக கரிசனைக்கு எடுக்கப்படுவார்கள்).

(ரூபா 30,575 கொண்ட சம்பளப் புள்ளிக்கு அப்பால் செல்வதற்கு நிதி முகாமைத்துவத்தில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமாவை உத்தியோகத்தர் கொண்டிருப்பது அவசியமாகும்.)

2. **பதவி** : தலைவர், வெளியீட்டு அலகு

(1) தகைமைகளும் அனுபவமும்.-

(i) பாடமொன்றாக ஆங்கிலத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் அல்லது க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சிங்களத்தில்/தமிழில் திறமைச்சித்தியுடன், வெகுஜன தொடர்பாடலில் பட்டம்.

அத்துடன்

புகழ்பெற்ற நிறுவனமொன்றில் தகவல் மற்றும் வெளியீடு மற்றும் முகாமைத்துவம் ஆகிய பணியில் 10 வருடங்களைக் கொண்ட அனுபவம்.

அல்லது

(ii) ஹெ. க. ஆ. ப. நிறுவகத்தில் 10 வருடங்களைக் கொண்ட அனுபவத்துடன் பட்டத்தைக் கொண்டுள்ள தகவல், வெளியீட்டு உத்தியோகத்தர்.

(2) வயது.- 22-45

(3) சம்பளக் குறியீடும், சம்பள விகிதமும்.- (MM 1-1) ரூபா 25,640 - 3×665 - 7×735 - 15 × 925 - ரூபா 46,655

(அனுபவத்தைக் கொண்ட தேருநர்கள் மேற்படி சம்பள விகிதத்தின் மீது பொருத்தமான புள்ளியொன்றில் நியமனத்திற்காக கரிசனைக்கு எடுக்கப்படுவார்கள்).

(ரூபா 30,575 கொண்ட சம்பளப் புள்ளிக்கு அப்பால் செல்வதற்கு வெகுஜன தொடர்பாடலில் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் பட்டத்திற்குப் பிந்திய டிப்ளோமாவை உத்தியோகத்தர் கொண்டிருப்பது அவசியமாகும்.)

3. **பதவி** : ஆராய்ச்சி உத்தியோகத்தர்

(1) தகைமைகளும், அனுபவமும்.-

(i) புள்ளிவிபரக் கணிதவியல், கமத்தொழில், அபிவிருத்திப் பொருளியல், சூழல் பொருளியல், புள்ளிவிபரவியல் மற்றும்

சமூகவியல் ஆகியவற்றில் 1 ஆவது அல்லது 2ஆவது வகுப்பு மேல் பிரிவுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பட்டம் அல்லது

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டத்திற்குப் பிந்திய பட்டத்துடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களுடன் சேர்த்து அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம்.

அல்லது

சம்பந்தப்பட்ட துறையொன்றில் 08 வருடங்களைக் கொண்ட அனுபவத்துடனும், நூற்கல்வி வெளியீடுகளில் சிறந்த சாதனையொன்றுடனும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பட்டம்.

(2) வயது : 22-45

(3) சம்பளக் குறியீடும் சம்பள விகிதமும்.- (AR 1) ரூபா 24,725- 5×550 - 5×645 - 15 × 770 - ரூபா 42,250

(அனுபவத்தைக் கொண்ட தேருநர்கள் மேற்படி சம்பள விகிதத்தின் மீது பொருத்தமான புள்ளியொன்றில் நியமனத்திற்காக கரிசனைக்கு எடுக்கப்படுவார்கள்).

(4) பதவி : தகவல்/வெளியீட்டு உத்தியோகத்தர் (ஆங்கிலம்/சிங்களம்) - தரம் 1

(1) தகைமைகளும் அனுபவமும்.-

(i) பாடமொன்றாக சிங்களம்/ ஆங்கிலத்துடனும் (சம்பந்தப் பட்டவாறு ஐந்து வருடங்களைக் கொண்ட சம்பந்தப்பட்ட அனுபவத்துடன் சமூக விஞ்ஞானங்கள் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம்.

அல்லது

ஒரே அமர்வில் க. பொ. த. (உ/த) பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தில் 04 பாடங்களில் அல்லது புதிய பாடத்திட்டத்தில் 03 பாடங்களில் சித்தியுடன் மற்றும் க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி.

அத்துடன்

அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் தகவல்/ வெளியீட்டுப் பணியின் துறையில் ஆகக்குறைந்தது 10 வருடங்களைக் கொண்ட அனுபவம்.

(2) வயது : 22-45

(3) சம்பளக் குறியீடும் சம்பள விகிதமும்.- ( JM 1-2) ரூபா 20,890- 10 × 365 - 18 × 550 - ரூபா 34,440

(அனுபவத்தைக் கொண்ட தேருநர்கள் மேற்படி சம்பள விகிதத்தின் மீது பொருத்தமான புள்ளியொன்றில் நியமனத்திற்காக கரிசனைக்கு எடுக்கப்படுவார்கள்).

5. **பதவி** : புள்ளிவிபர உத்தியோகத்தர்

(1) தகைமைகளும் அனுபவமும்.-

(i) 05 வருடங்களைக் கொண்ட சம்பந்தப்பட்ட அனுபவத்துடன் புள்ளிவிபரத்தில் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம். கணனி அறிவு மேலதிக தகைமையாக விளங்கும்.

(2) வயது : 22-45

(3) சம்பளக் குறியீடும், சம்பள விகிதமும்.- (JM 1-2) ரூபா 20,890- 10 × 365- 18 × 550 - ரூபா 34,440

6. **பதவி** : புள்ளிவிபர உதவியாளர் - தரம் III

(1) தகைமைகளும், அனுபவமும்.-

(i) புள்ளிவிபரவியல், கணிதம், பொருளியல், கமத்தொழில், வர்த்தகம், பொது/ வியாபார நிருவாகம் ஆகியவற்றுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம். பட்டத்திற்கு பாடமொன்றாக கணிதத்தை கொண்டிருக்காத தேருநர்கள் க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணிதத்தில் சித்திபெற்றிருக்க வேண்டும். கணனி அறிவு மேலதிக தகைமையாக விளங்கும்.

(2) வயது : 22-45

(3) சம்பளக் குறியீடும், சம்பள விகிதமும்.- (MA 2-2) ரூபா 14,610- 10 × 145 - 7 × 170 - 4 × 290 - 20 × 345 - ரூபா 25,310

7. **பதவி** : தரவுப் பகுப்பாய்வாளர்

(1) தகைமைகளும் அனுபவமும்.- புள்ளிவிபரவியல் மென் கணியத்தைப் பயன்படுத்தி தரவுப் பகுப்பாய்வில் 05 வருடங்களைக் கொண்ட சம்பந்தப்பட்ட அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம். கணனி அறிவு மேலதிக தகைமையாக விளங்கும்.

(2) வயது : 22-45

(3) சம்பளக் குறியீடும், சம்பள விகிதமும்.- (JM 1-2) ரூபா 20,890- 10 × 365 - 18 × 550 - ரூபா 34,440

**வேறு அனுகூலங்கள்**.- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு நிறுவகத்திலிருந்து பங்களிப் 15% என்ற வீதத்திலும், ஊழியரிடமிருந்து 10% என்ற வீதத்திலும் விளங்கும். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஊழியரின் சம்பளத்தின் 3%க்கு சமமான பங்களிப்பை நிறுவகம் செய்யும். அரசாங்கத் துறை ஊழியர்களுக்கு தற்போது கிட்டுகின்ற வருமான வரியிலிருந்து விலக்களித்தல் பிரயோகிக்கப்படும். இப்பதவிகள் ஓய்வூதியம் சாராதவையாகும். நிறுவகப் பணியணியினருக்கு மருத்துவத் திட்டமொன்று கிட்டுகின்றது. இப்பதவிகள் ஓய்வூதியம் சாராதவையாகும்.

மேற்படி பதவிகளுக்கு குறிப்பிடப்பட்ட சம்பளங்களுக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படிகள் கொடுப்பனவு செய்யப்படும்.

மேற்படி பதவிகளுக்கான ஆகக்கூடுதலான வயதெல்லைகள் ஏற்கனவே அரசாங்க/ கூட்டுத்தாபன சேவையிலுள்ளவர்களுக்கு பிரயோகிக்கப்படமாட்டா.

சரிவர நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பிறப்புச் சான்றுப்பத்திரம், கல்வி சான்றுப்பத்திரங்கள், மற்றும் அனுபவச் சான்றுப்பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்ட தபாலில் 2010, ஜனவரி 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பாக எனக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தபாலுறையின் மேல் இடது கை மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்க வேண்டும். அரசாங்கத் திணைக்களம்/ கூட்டுத்தாபனங்கள்/ நியதியாக்கச் சபைகள் ஆகியவற்றில் சேவையாற்றும் தேருனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலவரின் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டால் மட்டுமே கரிசனைக்கு எடுக்கப்படும்.

பணிப்பாளர்,
ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்,
114, விஜேராம மாவத்தை,
கொழும்பு 07,
12 நவெம்பர் 2009.

11-825

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு

### செவிப்புலன் தொழிநுட்பவியலாளர் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் - 2009

சுகாதார சேவைத் திணைக்களத்தின் செவிப்புலன் தொழிநுட்ப வியலாளர் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளு வதற்கு தகுதி வாய்ந்த இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. கல்வித் தகைமைகள்.-**

1. 1 (அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் பௌதீகவியல் அடங்கலாக விஞ்ஞான பாடங்கள் மூன்றில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஆ) இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம், உள்ளடங்கலாக இன்னுமொரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

1.2 ஏனைய தகைமைகள்.- (அ) 2009.12.28 ஆந் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவை செய்ய விருப்புடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) சிறந்த உடல் ஆரோக்கியம் இருத்தல் வேண்டும்.

2. தேவையான தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு போட்டிப்பரீட்சையொன்று நடாத்தப்பெற்று ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறுவோர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

***பரீட்சை முறைமைகள் :***

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றின் எல்லா வினாப் பத்திரங்களுக்கும் ஒரு மொழியில் விடையளித்தல் வேண்டும்.

**தேர்வு செய்யப்படும் முறைமை.-** தகுதி பெறுவதற்கு ஒரு விடயத்திற்கு 40% புள்ளிகள் அல்லது அதற்கும் கூடிய புள்ளிகள் பெறுதல் வேண்டும். இப்பரீட்சையில் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களினது தகைமைகள் பரிசீலிக்கப் படும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தகுதிவாய்ந்த இரண்டு விடயங்களிலும் ஆகக்கூடுதலான புள்ளிகள் பெறும் பரீட்சார்த்திகள் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுவார்கள்.

***பரீட்சை சம்பந்தமான விடயங்கள் :***

இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும் :-

| விடயம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| தொழில்நுட்ப வினாப்பத்திரம் | 01 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| மொத்தப்புள்ளிகள் | | 200 |

***பாடவிதானம்.-***

(i) நுண்ணறிவுப் பரீட்சை.- விண்ணப்பதாரியினது சிந்திக்கும் தர்க்கரீதியான ஆற்றல் மற்றும் அவருடைய தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றினைப் பரிசீலித்தல்.

(ii) தொழில்நுட்ப வினாப்பத்திரம்.- குறித்த பதவிக்குரிய விஞ்ஞான அறிவு.

3. இது ஒரு முழுநேரப் பயிற்சியாக இருப்பதனால் கிழமையில் ஐந்து (05) நாட்களிலும் சனிக்கிழமைகளில் முற்பகலிலும் ஏனைய பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கக்கூடாது.

**4. பயிற்சிக்காலம்.-** 02 வருடங்கள் ஆகும். (06 மாதங்கள் நிறுவனப் பயிற்சியும் 1 1/2 வருடங்கள் செயல்முறைப் பயிற்சியும்.)

**5. விண்ணப்பிக்கும் முறை.-**

(அ) இத்துடன் உள்ள விண்ணப்பப் பத்திரத்திற்கு அமைய விண்ணப்பப் பத்திரம் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) **பரீட்சைக் கட்டணம்.-** "செயலாளர், சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு, "சுவசிரிபாய", இலக்கம் 385, வண. விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10" என்று எழுதப்பட்டு கொழும்பு பிரதான தபாலகத்தில் மாற்றக்

கூடியதுமான ரூபா 200 பரீட்சைக் கட்டணத்திற்கான காசுக்கட்டளை ஒவ்வொரு பரீட்சார்த்தியும் செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீள வழங்கப்படமாட்டாது.

(இ) இலங்கை நிர்வாக சேவை/ கல்வி நிருவாக சேவை/ அரச கணக்காளர் சேவை/ அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது ஆண்டு ஒன்றிற்கு ரூபா 124,080 பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியினது கையொப்பம் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

(ஈ) முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடது மூலையில் ''செவிப்புலன் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறிக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2009'' எனக் குறிப்பிட்டு 28.12.2009 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ''பணிப்பாளர், (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, "சுவசிரிபாய", இலக்கம் 385, வண. விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10'' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

6. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- சுகாதார செயலாளர் பரீட்சைத்திகதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுமதி அட்டைகள் வழங்குவார். இது தொடர்பான அறிவித்தல்கள் பத்திரிகையில் வெளியிடப்படும். இது குறித்து விண்ணப்பதாரிகள் அவதானமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்க பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு பின்வரும் ஆவணங்களில் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட சட்டப்படியான தேசிய அடையாள அட்டை ;

(ஆ) சட்டப்படி செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7. விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டைகளை உரிய காலத்தில் பெறாவிட்டால் பின்வரும் விபரங்களுடன் ''பணிப்பாளர் (பரீட்சைகள்)'' உடன் தொடர்பு கொள்ளவும் (தொலைபேசி இலக்கம் 011-2679160) :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) தெரிவுசெய்யப்பட்ட நகரம் ;
(இ) விண்ணப்பித்த மாவட்டம் ;
(ஈ) விண்ணப்பப்பதிவு இலக்கம் ;
(உ) கட்டணக் கொடுப்பனவின் பற்றுச்சீட்டு இலக்கம்.

8. அரசாங்க அல்லது அரச சார்பு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் தமது விணப்பங்களை நிறுவனத் தலைவர்கள் ஊடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

9. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

10. குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. இந்த அறிவித்தலுக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. கல்வி மற்றும் ஏனைய தகைமையைப் பூர்த்தி செய்து போட்டிப்பரீட்சையில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அவர்கள் தேவைப்படும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையில் ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுவோர் பயிற்சித் தகைமைக்கு நிராகரிக்கப்படுவார்கள்.

13. (அ) பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளில் நடைமுறையிலுள்ள விதிமுறைகளுக்கும் பிரமாணங் களுக்கும் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் காலத்திற்குக்காலம் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய கட்டளைகளுக்கும் உட்படுவார்கள்.

(ஆ) பயிற்சிப் பாடசாலைகளினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது லீவு மற்றும் பரீட்சை நிபந்தனைகளுக்கு அமையத் தவறினால் எந்தவொரு நட்டஈட்டுக் கொடுப்பனவுகளுமின்றி எவ்வேளையிலும் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

(இ) பயிற்சிக் காலத்தின்போது பயிற்சியாளர்களுக்கு படியொன்று கொடுக்கப்படும்.

(ஈ) பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் போது பயிலுநர்கள் தாம் இடையில் வெளியேறாது பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பதாகவும் பயிற்சியை முடித்துக்கொண்ட பின்னர் தமக்கு நியமனங்கள் வழங்கப்பட்டால் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் சேவை செய்வதாகவும் ஒப்பந்தமொன்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் செய்துகொள்ள வேண்டும். அவர்கள் பயிற்சியை விட்டு விலகினால் அல்லது பயிற்சியிலிருந்து வாபஸ் பெற்றால் அல்லது மேலே பிரிவு (ஆ) இன்படி தமது பயிற்சி நிறுத்தப்பட வேண்டுமாயின் அவருக்கு வழங்கப்பட்ட படிகளையும் அவரின் பயிற்சிக்காலத்தின் போது அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவினங்களையும் திணைக்களத்திற்கு மீளளிக்க வேண்டும் அல்லாவிடில் ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு அப்பணத்தை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

14. **சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள்**.- பயிற்சி முடிவின் போது நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு கடப்பாடு கிடையாது. ஆயினும் இறுதிப்பரீட்சையில் சித்தி யடைந்தவர்களுக்கு நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கிடைக்கப்பெறும் வெற்றிடங்களைப் பொறுத்து திறமை அடிப்படையில் திணைக்களம் செவிப்புலன் தொழில்நுட்பவியலாளர் தரம் III பதவிக்கு நியமனம் வழங்கும்.

15. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய விபரங்கள் கவனமாகவும் சரியாகவும் கொடுக்கப்பட வேண்டும். பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் அல்லது நியமனம் வழங்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்ட விபரங்கள் பிழையானது என நிரூபிக்கப்பட்டால் நியமனத்தை இரத்துச் செய்து அவரைப் பயிற்சி/ சேவையில் இருந்து விலக்கி தகைமையற்றவர் என முத்திரை குத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

16. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தாம் பயிற்சியைப் பின்பற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கடமை யாற்றுவதற்கும் மன, உடல் ரீதியாகத் தகுதியானவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். மருத்துவ பரிசோதனை மூலம் சிபாரிசு செய்யப்படாதவர்கள் பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்குத் தகுதியற்றவர்களாவார்கள்.

17. அந்த வகையில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை விதிகள், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் வகுக்கப்படும் கொள்கைகள், நிதி மற்றும் ஏனைய பிரமாணங்கள் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் நடைமுறைப்படுத்தப்படும் விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

18. பயிற்சி தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்தவொரு பிரச்சினை பற்றி சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சின் செயலாளர் எடுக்கும் தீர்மானம் இறுதியானது.

டாக்டர் எச். ஏ. பீ. கஹந்தலியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு.

2009.11.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு**

செவிப்புலன் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறிக்கு
மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2009

[ ]

அலுவலக பயன்பாட்டுக்காக

மொழி மூலம் : [ ]
சிங்களம் - S
தமிழ் - T
ஆங்கிலம் - E
(குறித்த எழுத்தை பெட்டியில் எழுதவும்)

விருப்பு வரிசையில் விண்ணப்பித்த மாவட்டம்

| | |
|---|---|
| | |
| | |
| | |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : -----.
(இ) முழுப் பெயர் (சிங்களம்/தமிழ்) :-----.
(ஈ) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :-----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. (அ) நிரந்தர வதிவிட விலாசம் : -----.

| (சிங்களத்தில்/தமிழில்) | (ஆங்கிலத்தில்) |
|---|---|
| .................................. | .................................. |
| .................................. | .................................. |
| .................................. | .................................. |

(ஆ) அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய விலாசம் :----.

3. (அ) பால் : [ ] பெண் - F
ஆண் - M
(உரிய எழுத்தைப் பெட்டியில் எழுதவும்)

(ஆ) பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

(இ) 28.12.2009 இல் வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

4. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா.த.)ப் பரீட்சையின் முதல் அமர்வு:
வருடம் :-----.
சுட்டெண் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

க. பொ. த. (சா.த.)ப் பரீட்சையின் இரண்டாவது அமர்வு:
வருடம் :-----.
சுட்டெண் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

க. பொ. த. (உ.த.)ப் பரீட்சை :
வருடம் :-----.
சுட்டெண் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. ஏனைய தகைமைகள் :----.

6. எப்போதாவது எந்தவொரு குற்றச்செயலுக்கும் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டீரா? :-

ஆம் ☐ இல்லை ☐

(குறித்த பெட்டியில் "✓" இடவும்)

ஆம் எனில், விபரிக்கவும் :----.

7. பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டு விபரங்கள் : -----.
   (அ) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
   (ஆ) பண உறுதிச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
   (இ) செலுத்திய தொகை :----.

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
   (அ) இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள தகவல் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் எந்தவொரு பகுதியை நிரப்பாததற்கு அல்லது பிழையாக நிரப்பியதற்கான எந்த இழப்பையும் ஏற்றுக்கொள்ள நான் இணங்குகின்றேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் சரியாக நிரப்பியுள்ளேன் என உறுதி கூறுகின்றேன்.

   (ஆ) இந்த உறுதிமொழி நியமனத்திற்கு முன் பிழையானதென நிரூபிக்கப்பட்டால் நான் தகைமையற்றவனாகச் செய்வதற்கும் இது நியமனத்திற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை அறிவேன்.

   (இ) இந்தப் பரீட்சையின் எல்லா நிபந்தனைகட்கும் உட்பட்டு நடக்க இணங்குகின்றேன்.

   (ஈ) இந்த விண்ணப்பத்தில் கொடுத்த எந்தவொரு தகவலையும் பின்னொரு கட்டத்தில் மாற்றமாட்டேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................... என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் அவர் தமது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :-----.
பதவிப்பெயர் :-----.
விலாசம் :-----.
திகதி :-----.
(உத்தியோகபூர்வ ரப்பர் முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

11-829

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.